புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

==================================================================

ஊத்தங்கரை வட்டார தாலாட்டுப்பாடல்களின் இன்றைய நிலை

==================================================================

பெ.உதயமூர்த்தி,

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழ்த்துறை

தூயநெஞ்சக் கல்லூரி.

திருப்பத்தூர்.

==================================================================

**முன்னுரை:-**

ஊத்தங்கரை வட்டார மக்கள் தாலாட்டுப்பாடல்களை எவ்வாறு அனுகுகின்றனர்.அவர்களிடையே பாடப்படும் முறை,யார் அதிகமாக பாடுகின்றனர்,அதன் பின்புலம்,பாடுகின்ற நேரம்,உறவுகளை வைத்துப் பாடும் முறை, சமூகத்தின் வெளிப்பாடு மற்றும் தாலாட்டின் விளக்கத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**தாலாட்டுப் பாடல்களின் விளக்கம்:**

தாய் தனது குழந்தையை தொட்டிலில் போட்டு அதன் விளிப்பு நிலையை மறக்கச் செய்து அழுகையை நிறுத்தி, மனதிற்கு நிம்மதியளித்து,அரவணைப்பை ஊட்டி உறங்கச் செய்வதாக தாலாட்டு அமைகின்றது. தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கிறது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்து பிறக்கின்றது, எனவே தான் “தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப்பரிசு தான் தாலாட்டு” என்று தமிழண்ணல் [ 1 ] கூறுகிறார். 'தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல், அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு என்கிறார் டாக்டர் ஆறு. அழகப்பன் [ 2 ].தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும்

எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம் என்கிறார் டாக்டர். சு.சக்திவேல் [ 3 ]. தாலாட்டுப் பாடல்களில் தாய்மையின் அன்பும், பாசமும். அக்கறையும், வருங்காலத்தின் எதிர்பார்ப்பும், எண்ணங்களின் வெளிப்பாடும், தெய்வத்தை வேண்டும் முறையும் தாலாட்டில் இடம் பெறுகின்றது.

**<u>தாலாட்டு -சொல் மற்றும் பொருள்:</u>**

தாலாட்டு என்ற சொல் தால்+ஆட்டு என்ற சொல் சேர்க்கையால் பிறந்ததாகும். தால் என்பதற்கு நாக்கு, தொட்டில் என்ற இரு பொருளுண்டு. நாவை ஆட்டிப் பாடுதலால் தாலாட்டு என்றும், தொட்டிலை ஆட்டிப் பாடுதலால் தாலாட்டு என்றும் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்பார் டாக்டர்.சு.சண்முகசுந்தரம் [ 4 தமிழில் தாலாட்டு, ஆங்கிலத்தில் LULL (அமைதி) [ 5 ] தெலுங்கில் ‘’ஊஞ்சோதி’’ ,மலையாளத்தில் "தாராட்டு’’ கன்னடத்தில் ‘’ஜோகுல’’ என்றும் குறிப்பிடுகின்றனர். ஊத்தங்கரை மக்கள் தாலாட்டு, தூரிப்பாட்டு தொட்டில் பாட்டு, கொஞ்சும் பாட்டு, என்றும் பேச்சு வழக்கில் குறிப்பிடுகிறார்கள்.தாலு என்ற சொல்லுக்கு ‘’நாக்கு’’ என்று சென்னைப் பல்கலைக்கழக அகராதி பொருள் தருகின்றது [ 6 ]

**<u>தோற்றம் மற்றும் பாடப்படும் நேரம்:</u>**

குழந்தைகளுக்கு முதன் முதலில் புலனாகும் உணர்வுகளில் கூர்மையானது செவி உணர்வே. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் அமைதிப்படுத்தவும் முதலில் குரலைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.குழத்தை உலகில் தோன்றியதுமே ஆராரோ என்ற தாலாட்டிசையும் உடன் பிறந்து விடுகிறது எனலாம் என சி.எம். பௌரா [ 7 ] என்னும் அறிஞர் தம் நூலில் இக்கருத்தை வலியுறுத்துகின்றார். தாலாட்டுக்கென தனியே நேரம் ஒதுக்குவதில்லை,குழந்தை அழும்போது பாடுவர். பொழுது போக்கிற்காக பாடுவர். ஊத்தங்கரை வட்டாரத்தில் அதிகமாக பெண்கள் கூலி வேலைக்கும் செல்வர். செல்லும் இடத்தில் தொட்டில் கட்டி தாலாட்டுப்பாடும் முறையை கள ஆய்வின் போது காண முடிந்தது.

**<u>ஊத்தங்கரை வட்டாரத்தில் தாலாட்டைப் பாடுவோர்:</u>**

ஊத்தங்கரை வட்டாரத்தில் தாலாட்டுப்பாடலை அதிகமாக பாடுவது தாய்தான், முதலில் தாய் பாடுவதில்லை முதலில் பெரியவர்கள் பாடுவர்கள் பின்பு கூச்சம் நீங்கி தாய் பாடுவாள். தாலாட்டுப் பாடுவதில் வயதானவர்களே அதிகம், 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், ஒருசில ஆண்களும் தாலாட்டுப் பாடுவதை கள ஆய்வின் வழி அறிய முடிகிறது.

**தாலாட்டுப் பாடல்களின் இன்றைய நிலை:**

இக்காலம் பரபரப்பான வேகம் நிறைந்த காலமாக உள்ளது. இன்றைய தாய்மார்கள் ஒரு சிலர் கணவனையோ, உறவினர்களையோ புகழ்வது போன்று இகழ்ந்து பாடும் முறையையும் காணமுடிகின்றது. தாய்பாடும் பாடலைக் கேட்டு தாயில்லாத நேரத்தில் தன் மனதில் பதிந்த பாடலை தன் உடன் பிறந்தவர்களுக்கு பெண் பாடுகின்றாள். தொட்டில் கட்டி பாடிய முறை போய். தொலைக்காட்சியும், கைபேசியும் போதுமென நினைத்து விட்டனர். ஊத்தங்கரை வட்டாரத்தில் தாலாட்டு பாடுவோர். நடுத்தர வயதினராகவே உள்ளனர். இன்றைய தலைமுறையினருக்கு ஒரு சிலரைத் தவிர ஈடுபாடு இல்லை என்பதே கள ஆய்வில் அறிய முடிகிறது.

**தாலாட்டுப் பாடல்களில் தாய்மை உள்ளத்தின் வெளிப்பாடு:**

ஊத்தங்கரை வட்டார தாய்மார்களிடையே குழந்தை இல்லாத போது பட்ட துன்பங்கள். குழந்தை வேண்டி தான் செய்த புண்ணியங்கள், குழந்தை பெற்ற உடனே ஏற்பட்ட மகிழ்வு, குழந்தையின் எதிர்காலத்தை பாடுதல், குழந்தையின் தாய்மாமனை அதிகமாக சொல்லி பாடுதல். பெருமை பேசப்படுகின்ற பாடல்களையும் நடை முறை வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளையும் மாமனார், மாமியார், மாமா, அத்தை, அக்கா நன்மை, தீமைகளை விளக்கும் விதமாகவும் பாடினார்கள்.உறவு முறைகள் மட்டுமல்லாது சாதியம், பொய்ம்மை உருவ கேலி, கற்பனை போன்ற சமூகம் சார்ந்த நிகழ்வுகளும் காணப்படுகின்றன.

மாமன் அடித்தானோ
மல்லி பூ செண்டாலே
அத்தை அடித்தாளோ
அல்லி பூ செண்டாலே
பாட்டி அடித்தாளோ
பால் வடியும் கொம்பாலே-
(குழந்தை அழும்போது தாய் பாடுவது)

1. தங்க கொடி முறுக்கி
தங்கத்தால் தொட்டி கட்டி

தங்க கொடி அசற.. நீ

தர்ம மகன் கண்ணசற

வெள்ளி கொடி முறுக்கி

வெத்தலைய தொட்டி கட்டி

வெள்ளி கொடி அசற-நீ

பீமன் மகன் கண்ணசற

(குழந்தை உறங்க தாய் பாடுவது)

3. காது குத்த வர்றாக என்கண்ண

பச்சரிசி குத்துறாங்க
ஊரு இடி முழங்க
பச்சரிசி ஒருபடி
பழதேங்கா முந்நூறு
கட்டோட வெத்தலை பாக்கு
ஊரக்கூட்டி வராங்க உங்க மாமன்
(மாமன் தரும் சீதனம்).

**முடிவுரை:**

ஊத்தங்கரை வட்டார தாய்மார்களிடையே ஆராரோ ஆரிராரோ. ரே ரே ரே ....... தாலாட்டின் நிலையில் போன்ற சொற்கள் இடம்பெறுகின்றன. தாலாட்டுப் பாடல்களில் பாசம், நம்பிக்கை, சடங்குகள், பழக்க வழக்கங்கள், சமுதாய நிகழ்வுகள் வெளிப்படுகின்றன. குழந்தையை உறங்க வைக்கும் இசையாக தாலாட்டு இருந்தாலும் இன்றைய தலைமுறையினரிடையே மறைந்து வருகின்றது. நம் பண்பாட்டின் உயிர் மூச்சான நாட்டார் கலைகள் மனித மாண்புகளை வெளிப்படுத்தும் விதமாக இருந்த நிலை மாறி மறையத் தொடங்கியுள்ளதை கள ஆய்வின் வாயிலாக அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்:**

1. தே.லூர்து,நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்

2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு

3. கோ. பெரியண்ணன். நாடுபோற்றும் நாட்டுப்புறப் பாடல்கள்

**அடிக்குறிப்புகள்:**

1. தமிழண்ணல் தாலாட்டு ப-11

2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு. ப. 43

3. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு. ப. 43

4. சு. சண்முக சுந்தரம், நாட்டுப்புற இயல் அறிமுகம் – 1976

5. ஆங்கில அகராதி

6. சென்னைப் பல்கலைக்கழக அகராதி – 1849

7. C.M. BOWRA, PRIMITIVE SONG -P.61.